# அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி

(தேசிய தர நிர்ணயக் குழுவின் மறு தர மதிப்பீட்டிலும் “ஏ”தகுதி பெற்றது)

நாள் : 28.2.2017

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் தேசிய அறிவியல் தினம் இன்று (28.02.2017) கொண்டாடப்பட்டது. அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர் பேரா. சொ.சுப்பையா அவர்கள் இந்நிகழ்ச்சியை துவக்கி வைத்து மாணவர்களிடையே உரை நிகழ்த்தினார். அவர் தமது உரையில் அழகப்பா பல்கலைக்கழகத்தில் மாணவர்களின் ஆராய்ச்சி மேம்பாட்டிற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள பல்வேறு வசதிகளை குறிப்பிட்டார். அழகப்பா பல்கலைக்கழகத்தில் இருக்கக்கூடிய வசதிகளை பல்கலைக்கழக மாணவர்கள் மட்டுமன்றி கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்கள் நேரில் பார்த்து பயன் பெறுவதற்காகவே இந்தநிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார். இணைப்பு கல்லூரிகளை சேர்ந்த மாணவர்கள் கடந்த ஒரு வாரமாக பல்கலைக்கழகத்தில் உள்ள தன்னார்வ பயிலும் வட்டம், மைய நூலகம், அறிவியல் வளாகம் மற்றும் வள்ளல் அழகப்பர் அருங்காட்சியகம் ஆகியவற்றை பார்வையிட்டு சென்ற வன்னம் உள்ளனா் என்றும் குறிப்பிட்டார்.



இன்று சிவகங்கை மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்த பள்ளிகளிலிருந்து 1000 த்திற்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் அறிவியல் வளாகத்தில் அமைந்துள்ள பல்வேறு அறிவியல் துறைகளில் நிறுவப்பட்டுள்ள ஆய்வகங்கள், நூலகம், கணினி ஆய்வகம், கருத்தரங்க அறைகள் ஆகியவற்றை நேரில் பார்வையிட ஏற்பாடு செய்யப்பட்டது அவர்களுக்கு அறிவியல் பாடம் சம்பந்தப்பட்ட பல்வேறு செய்திகளை தத்தம் துறை பேராசியர்களும், ஆராய்ச்சி மாணவர்களும் வழங்கினர். அறிவியல் வளாக இயக்குநர் முனைவர் எஸ்.கருத்தப்பாண்டியன், அறிவியல் புல முதன்மையர் முனைவர் பி.மணிசங்கர் அறிவியல் துறைசார்ந்த பேராசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.





ஆட்சிக்குழு உறுப்பினர்கள் முனைவர் ஜெ.ஜெயகாந்தன், முனைவர் கே.குருநாதன் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

பேரா.வி. பாலச்சந்திரன்
பதிவாளர் (பொ.)